[18th August 1961

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes Sir.

(*b*) The proposal is to construct a submersible causeway at mile 7/4 of Muthupet Mimisal road at a cost of Rs. 2·5 lakhs. The work will be taken up for execution after finalization of the estimate which is under the scrutiny of the Chief Engineer (Highways and Rural Works).

Depressed Classes' League (financial aid)

* 1228 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோர் லீகிற்கு நம் அரசாங்கம் நிதி உதவி தருகிறதா ?

(இ) எவ்வளவு தொகை, எந்தெந்த இனத்திற்காக ?

(உ) இந்த லீக் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes, Sir.

(இ) A grant of Rs. 11,904 is now being paid every year to the Depressed Classes League to cover its activities like—

(1) Supply of pamphlets to villagers on removal of untouchability;

(2) Conduct of bajanas, dramas, etc., in villages;

(3) opening of libraries in villages for eradication of untouchability; and

(4) appointment of typist-*cum*-clerk at its headquarters office.

(உ) Yes, because the payment of grant is generally release to the League only after receipt of a copy of the audited report of accounts of the previous year.

SRI A. VEDARATHNAM : சர்க்கார் வழங்கும் இந்தத் தொகையை நல்ல முறையில் பயன்படுத்துவார்களேயானால் இந்தத் தொகையை இன்னும் அதிகரிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றிப் பரிசிலனை செய்து தான் சொல்ல முடியும்.

SRI M. KALYANASUNDRAM : ஸார், இந்த ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் உதவி செய்கின்ற காரணத்தால் இந்த ஸ்தாபனங்கள் எந்த அரசியல் கட்சிகளிலும் ஈடுபடக்கூடாது என்று அரசாங்கம் நிபந்தனை போட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் போடுகின்ற வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கட்டளை போடப்பட்டிருக்கிறது. ஆகவே அரசியல் கட்சிகளில் ஈடுபடுகின்ற பிரச்னை இதில் வராது.

18th August 1961]

SRI M. K. SOMASUNDARAM : இந்த ஸ்தாபனத்தின்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெற்று வரும் லைபரரிகளை மேற்பார்வையிடுவதற்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அடிக்கடி இவைகளிலுள்ள கணக்குப் பரிசீலனை செய்யப்படுகிறது. ஜில்லா அரிஜன நல அதிகாரிகள், டைரக்டர், உதவி டைரக்டர் இவர்களாலும் கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI P. G. MANICKAM : ஸார், தாழ்த்தப்பட்டோர் லீக்-க்கு மத்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது உதவி கிடைக்கிறதா ? அப்படியானால் ஆண்டு தோறும் எவ்வளவு கிடைக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற விவரம் இப்போது என்னிடமில்லை. இருந்தாலும் அகில இந்திய டிப்ரஸ்ட் கிளாஸ் லீகிலிருந்து கிடைக்கின்ற உதவி இந்த ராஜ்யத்திற்கு பயன்படுத்தப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், இம்மாதிரியான லைப்ரரிகள் ஜில்லாதோறும் எத்தனை எத்தனை இருக்கின்றன என்கின்ற புள்ளிவிவரத்தைத் தரமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை.

Bus routes to Sathanur Dam

* 1229 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா-

திருவண்ணாமலையிலிருந்து சாத்தனூர் அணைக்கட்டுக்கும், திருப்பத்தூரிலிருந்து சாத்தனூர் அணைக்கட்டுக்கும் உள்ள பல பஸ் ரூட்டுகளில் பஸ்களை அதிகப்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir. So far as transport facilities between Tiruvannamalai and Sathanur Dam are concerned. As regards Tirupathur and Sathanur Dam, the existing transport facilities are considered to be quite adequate.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், சாத்தனூர் அணைக்கட்டுக்குப் போக்குவரத்து அதிகமாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், அந்த ரூட்டுகளில் பஸ்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பாதையில் போகின்ற பஸ்களில் அதிகமான அளவில் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இந்த விவரங்கள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே இதைத் தடுப்பதற்காகவும், சர்க்காருடைய வருமானத்தை பெருக்கவும் இந்தப் பாதையில் அதிகமான பஸ்களை விடுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா ?